Registered as a News
Paper in Ceylon
P M G No. H A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ
( 1889 )
ஆவணி மாதம்
28 ௳ உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். - ருங] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஆனிமீ ரு௳ செவ்வாய்க்கிழமை (19 ஜூன் 1951) [இல். - உக]

## தொன்னெறி

II

(வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், ஆரணி)

இத் தென்னாட்டுச் சான்றோர்க் கெல்லாம் தனித் தலைவராய் விளங்கும் நால்வரும் மற்றைப் பெரியோரும் வடநாட்டுச் சைவ முறையைப் போற்றலும் தூற்றலும் செய்தாரல்லர். நம் மாணிக்கவாசக சுவாமிகள் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றதோடமையாது, 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றதாலாரும் அபேதமே கொள்ளற் குரியோம். இத்திருவாசகத்தால், சிவன் தென்னாடுடையவன் என்பதும், எந்நாட்டவர்க்கும் இறைவன் என்பதும் தெளிவாதலோடு உடையதாக் தொழிற்குத் தென்னாடும இறைமைக்கு எந்நாடும் உரியதில்லையும் நன்கு தெளிவாதல் வேண்டும். இறைமை எந்நாட்டிற்கும் பொது. உடைமை தென்னாட்டிற்கே சிறப்பு. இச்சிறப்பிற்குரிய தென்னாடு, சிலயாண்டுகளாகத் திருமுறைத் திருவிழாக்களைச் செய்துவரினும், இன்னும் பல்வேறு வகையில், தன்னையுடைய சிவனைத் தொன்னெறி பிறழாதவாறு வழிபட்டுய்யும் அரும்பெரும்பேறு எய்துதல் வேண்டும்.

தொன்னெறி பிறழ்ந்த குற்றமே இப்பொழுது சிவனை வழிபட்டுய்யும் அளவிலாப் பெரும்பேற்றைத் தென்னாடு இழந்து சிறத்தற்குக் காரணம். சிவன்கோவில்களையும் சைவ மடாலயங்களையும், சிவாசாரியர்களையும், மடாதிபதிகளையும் அந்நெறி வழாதவண்ணம் போற்றி வந்தனர் பழைய தென்னாட்டுச் சைவ நன்மக்கள். இற்றைய மக்கள் அந்நெறியின் உயர்வு உண்மையும் உரிமையும் அதனைக் காக்கும் கடமையும் அறியாமையேயன்றி, அறிந்தே தீங்கு செய்கின்றனர். இந்நாடு என்றும் இன்பம் பெற்று நன்கு விளங்கவேண்டின், சிவாலயங்களையும் மடாலயங்களையும் உயரிய நிலையில் வைத்துப் போற்றுதல் வேண்டும். மழை பெய்யாது கெடுக்கத் தொடங்கிய நாளையும், அந்நாளில் நடந்த சிவத்துரோக கிருத்தியத்தையும், அதைச் செய்வித்த வேற்றுச் சமயத்தாரையும் சிறிது நினைத்துப் பார்த்தல் வேண்டும். சிவனை வழிபட்டுச் சிவமாகிய பெரியோர் பலரும், தொன்னெறி வழாதிருக்கவேண்டி அரும்பெரும் பாடுபட்டனர். அந்நெறியை அவ்வாறே வழுவாமற் காத்து வந்தனர். அது நன்கு கைவந்தும், நெற்குறைந்த தென்றே தெரிந்தில தென்றே வருந்தி வேண்டினர். மாணிக்கவாசகரும், "உனை வந்திப்பதோர் நெறியறியேன், நின்னையே அறியேன், நின்னையே அறியும் அறிவறியேன்" என்று கவன்றது அறிக. அதன் காரணம் யாது?

"குறியுங் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப் பிரியும் மனத்தார் பிறிவரிய பெற்றியன்.... தில்லையாண்டான்" என்றதன்றேயன்றி வேறில்லை, நெறியிலாரினத்தைப் பிரிவிலார்க்குத் திருவருளில்லையென்பது, அவர்க்கு அச்சுறுத்தி வந்தது. நமக்கோ நெறியின்மையும் வருத்தந்தில்லது. குறியும் நெறியும் குணமும் உடையாரினத்தைத் தப்பிரியா மனத்தாரைப் பிரியாப்பெற்றியன் சிவன் என்பதில் நம்பிக்கை உண்மையாக வாய்க்கப் பெற்ற சைவன் எவனும தொன்னெறியை அறிய - அடைய புகழ முயலாமலிரான். முயலாது போனாலும் இகழான். நெறியறிந்தால் இந்நாளிற் கோயில்களையும் மடாலயங்களையும் பொருளாகிலே யொன்றே நோக்கி ஆட்சி வயப்படுத்தும் தீங்கு நேராது. கோயில்கட்கும்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

L K S LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எம். லெப்பை பிரதர்
தங்கமாளிகை
கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

உ

## தோத்திரம்

அவமேபொழு தொழியாதினி யழியாகிலை வரவும்
பவமேமுதல் வினைநீடிய பாசத்தளை விடவும்
உவமேயமும் உவமானமும் ஒன்றாகிய மதுரைச்
சிவமேயருள் செயுநீயொரு செயலற்றிரு மனமே

என்னுள்ளமே இனியேனும் வாழ்நாள் வீணே கழியாமல், நித்தியமான முத்திசித்திக்கவும், பிறவிக்கேதுவாகிய நீடித்தபாசமெனப்படுங் கட்டுகளெல்லாம் அறவே யொழியவும், ஒப்பாரும் மிக்காருமில்லாத (தாமே தமக்கு உவமையாகிய) வரும் ஏகமூர்த்தியாகவுள்ளவருமாகிய மதுரைச் சொக்கலிங்கப் பெருமானே திருவருள் புரிவார், ஆதலினால் நீ சும்மாவிரு என்பது பொருள்.

அவமே பொழுதொழியாதினி செயலற்றிரு எனக்கொண்டுகூட்டி முடிக்க. நான் எனதென்னும் அகங்கார மமகாரங்களை யொழித்து எல்லாமிறைவன் செயலென்றெண்ணி அவனிடத்துமெய்யன்புபாராட்டியொழுகுவையேல் மனமே, உனக்குத் தப்பாது முத்திசித்திக்குமென்றபடி.

[ 83 ]

## ஐக்கிய தாபன வைத்தியசாலை

### அத்திவாரமிடப்பட்டது

தெல்லிப்பழையில் ஐக்கிய தாபன முறையிற் கட்டப்பட விருக்கும் வைத்தியசாலைக்கு பாராளுமன்ற அங்கத்தினர் திரு. C வன்னியசிங்கமும் திரு. M. இராமுப்பிள்ளையும் சென்ற சனிக்கிழமை அத்திவாரமிட்டனர். இவ் வைத்தியசாலையைக் கட்டுதற்கு ஐந்து இலட்சம் ரூபா வேண்டுமென மதிப்பிடப்படுகிறது. தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்துக்கு, தெல்லிப்பழைக் கிராமச் சங்கத்தின் பழைய அங்கத்தினராகிய திரு. S. தம்பு கனகரத்தினம் என்பவரால் நன்கொடையாக அளிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - காங்கேசன் துறைத் தெருவிலுள்ள மூன்று ஏக்கர் நிலத்தில் வைத்தியசாலை நிறுவப்பெறுகிறது. திரு. கனகரத்தினத்தின் கொடையுடன் வேறு பலரின் பண உதவியையுங் கொண்டே இப்பெரிய தாபனம் ஆரம்பிக்கப்படுகிறது. வைத்தியசாலைச் சங்கத் தலைவரும் பாராளுமன்ற அங்கத்தினருமாகிய திரு. S. J. V. செல்வநாயகம் அச் சந்தர்ப்பத்திற் பேசியபோது ஐக்கிய தாபனமுறை வியாபாரத்தில் மாத்திரம் கைக்கொள்ளப்படுவதுமன்றி மனுஷ வாழ்க்கையின் ஏனைய துறைகளிலும் உபயோகிக்கப்படவேண்டுமெனக் கூறி புனாய் ஐக்கிய வைத்தியசாலையை ஓர் நன் முன்மாதிரியாக எடுத்துக்காட்டினர்.

இவ்வைத்தியசாலை அமைப்பு ஒவ்வொன்றும் நாலு அறைகளைக் கொண்ட 12 சிறுவீடுகளையும், இரண்டு பெரிய சாலைகளையும், காரியாலயக் கட்டடத்தையும், வைத்திய உத்தியோகத்தர் பரிபாலிப்புப் பணிப் பெண்கள் முதலியோருக்குரிய வீடுகளையுங் கொண்டதாயிருக்குமென வைத்தியசாலைச் சங்கக் காரியதரிசி திரு. T. K. இராசசேகரம் கூறினர்.

## திருப்புள்ளமங்கைத் தலவரலாறு

பண்-கட்டபாடை
திருச்சிற்றம்பலம்
பாலுக்துறு நிளாயினன்
பரமன்பிர மன தான்
போலுந்திற லவர்வாழ்தரு
பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திற லறச்சாடிய
கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை
யடையாவினை தானே.
திருச்சிற்றம்பலம்
— சம்பந்தசுவாமிகள்.

திருப்புள்ளமங்கை என்பது காவிரி நதியின் தென்கரையில் உள்ள பதினொருவது தலம். இத்தலத்திற் கோயிலின் பெயர் திருவாலந்துறை என்பது. ஆதலின் திருப்புள்ள மங்கைத் திருவாலந்துறை எனச்சேர்ந்தே வழங்கப்படுதலும் உண்டு. திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறை, திருச்சாத்தமங்கை அயவந்தி, திருப்பெண்ணாகடம் தூங்கானை மாடம் முதலியனவும் தலப்பெயரும் கோயிலின் பெயரும் வேறு வேறு வழங்குவன காண்க.

இறைவர் விடம் உண்டு அருள் செய்த பதியாதலின் இப்பெயர் போந்ததென்பது வழக்கு. புள்ளமங்கை எனனும் பெயருக்கேற்பக் கோபுரத்தில் கழுகுகள் சிலையாகக் குடிகொண்டுள்ளன என்பர். இத்தலத்தின் பொதுநுகளில் எங்கும் தேன் கூடுகள் காணப்படுகின்றன. இதனைப் பதிகத்துள் 'பொந்தின் னிடைத் தேன்வந்திய பொழில்சூழ் புளமங்கை" எனப் போற்றியிருப்பது காண்க.

பிராமி, மாகேசுவரி, கௌமாரி, வைணவி, வாராகி, மாகேந்திரி, சாமுண்டி என்னும் சப்த மங்கையர்களால் முறையே பூசிக்கப்பெற்ற சக்கரப்பள்ளி, அரிமங்கை, ஆலங்கை, சக்திமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ளமங்கை என்னும் சப்தமங்களத் தலங்களுள் இதுவும் ஒன்று.

தேவாரத் திருப்பதிகத்துள் "புளமங்கை - ஆலந்துறை" எனவும், "கலையாணமலி மறையோரவர் கருதித்தொழுதேத்த" எனவும் போற்றியிருப்பதைச் சேக்கிழார் பெருமானும் திருத்தொண்டர் புராணத்துள் "அருமன்றப் புலனுழைஞ் சிந்தையார் புள்ளமங்கைப்பதி, குலவுமாலந் துறைக் கோயில் வந் தெய்தினார்" எனப் பாராட்டியிருப்பது காண்க. இத் தலத்திற்குத் திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிய பதிகம் ஒன்றேயுள்ளது. சுவாமி பெயர் ஆலந்துறைநாதர். அம்மைபெயர் அல்லியங்கோதை.

இருப்பிடம்:— ஐயம்பேட்டை ஸ்டேஷனுக்கு மேற்கே முக்கால் மைல் திருச்சக்கரப்பள்ளி. அங்கிருந்தும் நற்சாலை வழி, மேற்கே ஒன்றேகால் மைல் சென்று வடக்கே திரும்பினால், கால் மைல் தூரத்தி லுள்ளது.

—தருமபுர ஆதீன வெளியீடு.
எண். 243.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ், கரஹூ ஆனி மீ ருஉ செவ்வாய்க்கிழமை


## சமய அறிவைப் புகட்டுதல்

எச்சமயவாதிகளுக்கும் இளமைப் பருவத்திலே சமய ஒழுக்கம், உணர்ச்சி, சாதனையென்னுமிவைகள் சோபான முறைப்படி யூட்டப்படல்வேண்டும்; இல்லையாயின் பெரும்பான்மையும் சமயப்பற்று அற்றுப்போக, விபரீதக் கொள்கைகள் தலைப்பட, அப்படித் தலைப்பட்டவர் பலர் கோடரிக் காம்புபோல், தாமே தம் சமயத்திற்குத் துரோகிகளாகித்தமக்கும், அறியாமையின்பாற்பட்ட பிறர்க்கும் இடரைத் தேடிவிடுகிறார்களெனலாம்.

சைவசமயத்தவர்களாகிய எங்களுக்குச் சமய ஆசாரத்தை நன்கு பயின்று ஏற்றவாறு நடப்பதற்காகிய பிரதான சாதனங்கள் மூன்று உள்ளன என்று சொல்லலாம். இந்த மூன்றுவன கல்வி, கேள்வி, கோயிற் பழக்கம்; இவற்றுட் கல்வியாவது, சைவ சமயத்தை அநுட்டிப்பவர்கள் சின்ன வயசிலேயே சமய ஆசாரத்தை நித்திய கடன்களைப் போதிக்கும் இலக்கண வினவிடை, நாவலர் நான்காம் பாலபாடம், சைவ போதம் முதலாம் நூல்களை முதற்பயிலுதல பின் வயசேற, வகுப்பேற, அறிவேற, சமய சாஸ்திரங்களைத் தம் தகுதிக்கு ஏற்றவாறு தக்க ஆசிரியர்மூலங் கற்றல் வேண்டும்; அந்த ஆசிரியரும் சமயாநுஷ்டானம் முதலியவற்றைக் கைக்கொள்பவராயின், அவர்கிலமை பொன்மலர் நாற்ற முடைத்தாதல் போலும்.

இப்படிப் பயின்று வரும்போது கேள்வியையுக் தொடங்கிக்கொள்ளலாகும்; சமய சம்பந்தமான விஷயங்கள் பற்றிப் படித்தவர்கள் பிரசங்கஞ் செய்யும்போது, கேட்டு விளங்கிக் கொள்ளுதலொன்று; மறைப் பெரியார் சொல்பவற்றைக் கேட்டுணர்ந்து நடத்தல மற்றொன்று; இளையார் சிறியார் அறியார் தமகுச் சமய விஷயமாக நேருஞ் சந்தேகங்களை, பெற்றார் உற்றார் பெரியாரிடத்து வினவியறிந்து ஒழுகுதல் பிறிதொன்றாகும்; இப்படிக் கேள்வி பல வாயிலாகப் பெறற்பாலதாகும்.

மூன்றாவது கோயிற்பழக்கம்; கல்வி கேள்விகளாற் சமய உணர்ச்சியும் ஒழுக்கமும் ஒரு அளவிற்குச் சித்தித்த பின்னர், கோயிலுக்குப் போக வேண்டிய ஆசார முறைகள், போய் வழிபடவேண்டிய முறைகள், கோயிலில் ஊடாடவேண்டிய விதங்கள் எனுமிவைகளை, நாம அறிந்துகொள்ள வேண்டுமானால், பயின்று கொள்ள வேண்டுமானால், இம்மூன்றிலும் நன்கு அநுபவப்பட்ட பெரியார்களுடன் கோயிலுக்குப்போய், அவர்கள் ஆலயததிற் செய்யும் வழிபாட்டு முறையையும், திருத்தொண்டின் இயல்பையும், கோயிலில் ஊடாடவேண்டிய விதத்தையும் நன்கு பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

இந்த மூன்று சாதனங்களிலும் ஒருவர் காலகதியிலே தேறிய பின், சமய சாத்திரங்களை ஞான சாத்திரங்களை, விதிப்படி கல்வியறிவு ஒழுக்கம் நிரம்பிய ஆசிரியரிடத்திற் படித்துக் கொள்ளலாகும்; சமய விஷயத்திற் சாதனை முந்தியும் போதனை பிந்தியும் நடத்தலும், இரண்டும் ஏக காலத்தில் நடத்தலுஞ் சாலுமே யொழிய, போதனை முந்தியுஞ் சாதனை பிந்தியும் நடக்குமானல், அது சித்தியாகாது; நீந்தப் பழகிய பின்னர்த்தான் நீரில் இறங்குவேன் என்று சொல்வதுபோல் அசம்பாவிதமாகும்.

சமயநூற் கல்வியை வித்தியாசாலைகள் கல்லூரிகளில், உபாத்தியாயர்களாயுள்ளார் தம் மாணவர்க்கு ஒரு அளவிற்கு ஊட்டி வந்ததும், அதனல் மாணவர் சமய நூலுணர்ச்சியையும், தெய்வத்தில் நம்பிக்கையையும்தெய்வ வழிபாட்டையும்ஒழுக்கத்தையும் பெற்றதுமுண்டு; அக்காலத்திலே உபாத்தியாயர்கள், சமய நூல்களைப் பயின்று தாங்களும் சமய நூலுணர்ச்சியுடையராய்த் தெய்வத்தில் நம்பிக்கை கொண்டவராய்ச் சமய ஒழுக்கம் பூண்டவர்களாய் விபரீதக் கொள்கை யற்றவர்களாயிருந்தார்கள்; அதனல் அது அக்காலத்திற் கைகூடிற்று; இக்காலத்திலே சமயத்தை மாணக்கருக்குப் போதிக்க எனப் பிரத்தியேகமாக ஆசிரியர்களில்லாராயினர்; ஏனைய கருவி நூல்களையும், ஏதும் பிழைப்பிற்காகிய நூல்களையும் படிப்பிக்க வந்த உபாத்தியாயர்கள், பிள்ளைகட்குச் சமய நூல்களைத் தக்கவாறு பயன்படு முறையிற் படிப்பிப்பாரெனக் காத்திருத்தல் வீணாகும்; உபாத்தியாயர்களுட் பலர் இக்காலத்திலே தெய்வ நம்பிக்கையற்றவர்கள்; சமயாநுஷ்டானம் முதலியவற்றைக் கைக்கொள்ளாதவர்கள்; சமய நூல்களை விதிப்படி கல்லாதவர்கள்; தாமாக ஏதுங் கற்றிருந்தாலும் அங்ஙனங் கற்றமையினல் விபரீத விளக்கக் கொள்கை கொண்டவர்கள்; அப்படிப்பட்ட உபாத்தியாயர்களைச் சமய நூல் படித்தற்கும் சமய ஒழுக்கத்தைப் பெறுதற்குந் துணையெனக்கொள்வது, வீழ்வார்க்கு வீழ்வார் துணையென்பதுபோல் அநர்த்தமாக முடியும். அவர்களிடத்திலே சமயநூலைக் கற்கவும் சமய ஒழுக்கத்தைப் பயிலவும் முயல்வதைக் காட்டிலும், சமய நூல்களை அறவே கல்லாமல் விடுவது நன்றெனலாம். ஏன்? கல்லாதவர்கள், நல்லார் பெரியார் சொல்வதைப் பின்பற்றித் தாங்களுஞ்செய்து நன்மையடைதல் கூடுமாதலினற்றான் அப்படிச் சொல்லுகிறோம்; சைவப் பிள்ளைகள் தங்கள் சமயப்படி ஒழுக வேண்டுமானல், சமய அறிவு ஒழுக்கங்களைப் பெற வேண்டுமானல், அப் பிள்ளைகளின் பெற்றார் குடும்பங்களிலுள்ள பெரியார் தாம்தாமே சைவ சமய ஒழுக்கத்தின்படி நடந்துகொண்டு தங்கள் பிள்ளைகளுக்கும் பிற்சந்ததியார்க்கும் அவற்றைப் பயிற்றி வைத்தல் வேண்டும், ஒழுகச் செய்தல் வேண்டும்; தந்தை யெவ்வழி மைந்தனும் அவ்வழி, குரு எவ்வழி சீடனும் அவ்வழி, அரசனெவ்வழி குடிகளும் அவ்வழி யென்னுமிவைகளெலாம் அநுபவஸ்தர்களாகிய மகான்கள் சொன்னவைகளாகும்.

## ஃ வானவில் ஃ

○ கலாமந்திரன் ○

● சென்ற வெள்ளிக்கிழமை(15-6-51) பகல் இரண்டே முக்கால் மணி வரையில், யாழ்ப்பாணப் பட்டினத்தின் ஒரு பாகத்தில் இல்லாதொழிந்த மின்சார அலையும் வெளிச்சமும், இற்றை வரையில் 5 நாளாகியும் இன்னமும் மீண்டு வந்தபாடில்லை; இந் நகரத்திலுள்ள வண் - வட மேற்கிலும், மேற்குக் கிழக்கிலுள்ள ஒரு பாகத்திலும் வசிக்கும் மக்கள் இராக் காலத்தில் வெளிச்சமின்றிப் பெரும் இடர் படுகிறார்கள்; அல்லாமலும் இந்த மின்சார அலையை நம்பி, இதுவாயிலாக யந்திரமியக்குந் தொழிற்சாலைகள் யந்திரசாலைகளும் தொழில் யாதுஞ் செய்யவியலாமற் பேரிடர்ப்படுகின்றனர்; இப்பத்திரிகை வெளியிடப்படுஞ் சைவப்பிரகாச யந்திரசாலையும், இம் மின்சார அலையையும் வெளிச்சத்தையும் நம்பித் தொழில் செய்வதாதலின், அவையிரண்டுமில்லாமையினல் இத்தனை நாளும் பெருங் கஷ்டப்படுகின்றது; அச்சியந்திரங்களை இயக்குதற்கு அலையில்லாமையால் ஐந்து நாட்களாக அவை சும்மா கிடக்கின்றன; இதனல் இங்குள்ள ஏனைய தொழில்களுந் தடைப்படலாயின.

● நகர சங்கத்தார் இடும் அலையும் வெளிச்சமுந் தவிர்ந்த நாள் தொடக்கம் இற்றைவரையில், இப்படித் தவிர்ந்தமைக்குக் காரணமென்ன, பழையபடி எப்பொழுது இவைகள் சரிவருமென்று ஆவலோடு வினவும் இப் பகுதி நகரவாசிகட்கு மின்சார வெளிச்ச தானத்துள்ள உத்தியோகத்தராக, எல்லாப் பொறுப்பையுமேற்ற நகர சபைத் தலைவராக, உரிய வட்டாரப் பிரதிநிதியாக, மறுமொழி சொல்லுவின்றிலர்; குறித்த அதிகாரிகள் உத்தியோகத்தர்கள், தானத்திற் கடமை பார்ப்பார் யாரிடத்தாயினும் அத்தகைய முறையில, இத்தப் பேரிழவின் காரணத்தைக் கேட்டறியலாமென்று வினவினல், அவர்கள் ஒவ்வொருவர் சொல்லுங்காரணங்களும் ஒன்றோடொன்றுமுரண்படுகின்றன. இப்படியாக இடையூறுகளே தம் நேர்ந்தால், அவற்றாற் பாதிக்கப்படும் வட்டார வாசிகட்குப் பறை சாற்றுவித்தேனும், துண்டுப் பத்திரிகை வெளியிட்டேனும் அதிகாரிகள் தெரிவிப்பதல்லவா யோக்கியமும் முறையுமாகும்? இச் சைவப்பிரகாச யந்திரசாலை அலையில்லையாக, வெளிச்சமில்லையாக, இதற்கு அயல்வீடுகளில் அலையும் வெளிச்சமும் எந்தநேரமுங்குறைவற உள்ளன; இதனல் நான் பொறாமைப் படுகிறேன் என எண்ணிக்கொள்ள வொண்ணாது; நகர வாசிகளுள் ஒரு சாரார்க்கு அலையும் வெளிச்சமுங் கொடுத்து, ஒரு சாராருக்குக் கொடாதொழிவது, நகரப்பிதாக்கள் ஒருகண் விழித்து ஒருகண் மூடுவதுபோற் பட்சபாதமாக முடியுமென்றதைத்தான் எடுத்துக்காட்டுகிறேன்; இப்பத்திரிகை இப்பொழுது காலந்தவறி வெளிவரநேர்ந்தால், அத்தாமதத்திற்குக் காரணம் இம்மின்சார அலை வெளிச்சங்களின் குழப்பமேயாம்.

## உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 9)

### "காலத்திற் கேற்ற கோலம்"

"சனி புதன்றனில் எண்ணெய் வெந்நீரில் மூழ்குவார்...." என்று பாடியிருக்கிறார்களே; உங்களுக்குச் சனியும் புதனும், பெண்களாகிய எங்களுக்குச் செவ்வாயும் வெள்ளியும், முழுக்குக்குரிய நாட்களாக விதிக்கப்பட்டிருப்ப, ஏன? அண்ணு, எல்லாமறந்த நீங்கள் சனி புதன் விடுத்து ஞாயிற்றுக் கிழமையில் முழுகத் தலைப்பட்டுக்கொண்டீர்கள்? மேலும் உபாத்தியாயராயிருக்கிற உங்களுக்குச் சனிக்கிழமைகளிலும் பள்ளிக்கூடங் கூடயில்லாமையினல், எண்ணெயிட்டு முழுகச் சௌகரியப்படுத்தானே; அண்ணு, இப்படியெல்லாம இவள் சொல்லுகிறாளேயென்று என்மேற் குறையெண்ணுதீர்கள்; முன்னோர் கொண்ட முறையை நாங்கள் கைவிட்டு நினைத்தபடி செய்தற்கு ஏதும் பிரதான ஞாயமுண்டோ என அறிந்துகொள்ளத்தான் உங்களைக் கேட்கிறேன்" என்று புன்னகையரும்பச் சொன்னுள்கமலாட்சி. "உவைகளில் உனக்கு நம்பிக்கை யுண்டோ? தங்காய், சனி புதனல்ல நாட்களில் எண்ணெயிட்டு முழுகினுல் உடம்பிலுள்ள சூடு நீங்காதோ! எல்லாம் பழையபடியென்றெண்ணி நடக்கமுடியாது; காலத்திற்கேற்ற கோலம என்றும் நடக்கத்தான வேண்டும்; நட்பம்பார்த்துக்கொண்டுகின்றல் ஒன்றுஞ்செய்யமுடியாது; ஞாயிற்றுக்கிழமை ஓய்வான நாள; எண்ணெயிட்டு முழுகிவிட்டு எங்குஞ் செல்லாமல், சிரமப்படாமல் ஒரு இடத்தில் ஆறுதலாயிருக்கலாமென றெண்ணினேன், ஞாயிற்றுக்கிழமையிலே எண்ணெயிட்டு முழுகுவதால் என்ன கெடுதி தங்கைச்சி" என்று பத்மநாதன் தனது தங்கையை வினவினன். "அண்ணு, இன்ன இனனகிழமையில் முழுகினல்இன்ன இன்னபயன் விளையுமென்று நான சிறுபிள்ளையாயிருந்த காலத்திலே மனனம் பண்ணிய பாட்டொன்று, அதனைத்தான் சிந்திக்கிறேன்" என்று சொல்லிக் கமலாட்சி உடனே அந்தப் பாட்டையும் பின்வருமாறு படித்தாள்:—

"வருமாதி வாரந் தலைக்கெண்ணெய்
ஆகாது வடிவம்மிகும்
அழகுபோம்,
வளர் திங்களுக்கு அதிக
பொருள் சேரும், அங்கார
வாரந்தனக் கிடர்வரும்,
இருமேவு புதனுக்கு
மிகுபத்தி வாழிடும்,
செம்பொனுக் கறிவுபோம்,
தேடிய பொருட் சேதமாம்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

வெள்ளி, சனியெண்ணெய்
செல்வமுண்டு, ஆயுளுண்டாம்''

என்று இப்படி ஒவ்வொருகாரணம் பற்றித்தான் அண்ணு, பெரியோர்கள் சிற்சில கருமங்களைச் சிற் சிலகாலத்தில விதித்தும் விலக்கியுமிருக்கிறார்கள்; காரணத்தை எங்களால் விளங்கிக்கொள்ள முடியாதென்றால், அது எங்கள் குற்றமேயொழியச்சொன்னவர்மேற் குற்றமில்லை யண்ணு; இந்தப் பூமிக்கும் பூமியில் வசிக்கும் ஜீவராசிகளுக்கும், நிதி நாள் கோள்களுக்குமிடையே தொடர்புகளுண்டண்ணு; "பொங்கு தழற் கதிரால், தண்ணென் கதிர்வரவாற் பொங்குங் கடல்" என்று பெரியோர் பாடியிருக்கிறார்களே; சூரியனைக்கண்டாற் கடல் பெருகாதாம், சந்திரனைக் கண்டாற் பெருகுமாம்; இதனை நாங்கள் நேரிற் காண்கிறோம்; ஆனால் இவைகளுக்கெல்லாம் ஞாயமறிந்துதான் செய்ய வேண்டுஞ் செய்யாமல் விடவேண்டுமென்றெண்ணினால் முடியுமா? பெரியோர்வாக்கையுங் கைக்கொள்ள வேண்டும் அண்ணு" என்று சொல்லி முடித்தாள்; கேட்ட பத்மநாதனும் சற்று நேரஞ் சிந்தித்துவிட்டு, "நீ சொல்வதும் நியாயந்தான் தங்கைச்சி; மேலும் உபாத்தியாயராகவிருக்கும் நாங்கள் தவறாக நடந்தாற் பிள்ளைகள் என்னதான் செய்யமாட்டார்கள். தங்கைச்சி, இன்று தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுகுவதை விட்டுவிட்டேன்; இனிச் சனிக்கிழமை, இல்லையேற் புதன்கிழமைகளிலேயே முழுக நிச்சயித்துக்கொண்டேன்" என்று தணிவுடன் சொன்னான்.

**"வேடிக்கையுமல்ல விளையாட்டுமல்ல"**

சற்று நேரம் கமலாட்சி சும்மாவிருந்துவிட்டுப் பத்மநாதனைப்பார்த்து, "அண்ணு, உங்கள் கல்யாணத்தை எப்போதைக்கு நடத்த உத்தேசித்திருக்கிறீர்கள்" என்று ஆவலுடன் வினவினாள்; பத்மநாதன் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "தங்காய் கல்யாணத்தைப்பற்றிய சிந்தனையை நான் முற்றாக விட்டுவிட்டேன்: இப்போதைக்குக் கல்யாணஞ்செய்து கொள்ள வேண்டுமென்ற நோக்கமே என்னிடத்தில்லை" என்று சிந்தனைகூரச் சொன்னான்; கேட்ட கமலாட்சி திடுக்குற்றாள்; "என்ன அண்ணு, வேடிக்கையாகப் பேசுகிறீர்களா" என்று மீட்டுங் கேட்டாள் கமலாட்சி; "வேடிக்கையுமல்ல, விளையாட்டுமல்ல, நிசமாகத்தான் சொல்லுகிறேன், தங்கைச்சி" என்று முகவாட்டத்தோடு பகர்ந்தான் பத்மநாதன். "ஏன்? அண்ணு அப்படிச் சொல்லுகிறீர்கள்; நீங்கள் அப்படிச் சொல்லுவதற்கு ஒரு காரணமுமில்லையே, நீங்கள் இப்படிச் சொன்னால் உங்களை நம்பியிருக்கும் வனசாட்சியின் கதியென்ன? அவளும் நித்திய கன்னிகையா யிருப்பதா" என்று சிறிது கவலைகூரக் கேட்டாள் கமலாட்சி; "கன்னிகையாயிருக்கிறவரையில் வனசா இன்னுமொருவருக்கு வாழ்க்கைப்படலாந்தானே, தெய்வத்தை நம்பியிருப்பதல்லாமல், மனுஷர் ஒருவரையொருவர் நம்பியிருப்பதாலாவதென்ன" என்று சற்று ஆத்திரத்தோடு சொன்னான் பத்மநாதன்; அதனைக் கேட்ட கமலா பின் எக்கேள்வியுங் கேளாமல், அவன் சொன்னதற்குச் சமாதானமுஞ் சொல்லமுயலாமல், மௌனமாயிருந்தாள்; தானுற்றிய மறுமொழி கமலாவிற்குப் பிடிக்கவில்லையென அயிர்த்த பத்மநாதன் "என் தங்காய், ஏதும் பேசாமலிருக்கிறாய்" என்று ஆதரவுடன் கேட்டான் "நீங்கள் சொல்வதெல்லாம் சரியாயிருப்பதால் நான் என்ன பேசுவதென்றெண்ணிச் சுமமாயிருக்கிறேன்" என்று புன்னகை யரும்பப் பன்னினாள் கமலா.

(வரும்)

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு

காரைநகர் மேற்கு
கார்த்திகேசு வைம்பெண்வள்ளியம்மை
வழக்காளி

இல. 7297

காரைநகர் மேற்கு
கந்தர் கணபதிப்பிள்ளை வைம்பெண் பாறுபதி இவவின் காலஞ்சென்ற புருஷன் கந்தர் கணபதிப்பிள்ளையின் ஆதனங்களுக்குத் தத்துவகாரன்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 7297 - ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1951 - ம் ஆண்டு ஆடி மாதம் 13 - ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை ரூபா 1179-50 இதில் ரூபா 1000/= க்கு 21-11-50 தொடக்கம் 13-2 51 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 6 வீதவட்டியும் அதன்பின் 13-2-51 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 293-50

காணிவிபரம்

காரைநகர்க்கோயிற்பற்று தங்கோடை இறை வில்லெளுவை அளவுபடத்தின்படி செற்பரப்பு 12 குளி $5\frac{1}{2}$ எல்லை கிழக்கு சண்முகம் கந்தையா வடக்கு கந்தையா பெண் சரஸ்வதி மேற்கு இராமனுதர் ஆறுமுகம் தெற்கு தில்லையம்பலம் முருகேசு, இதடங்கலும்

ஆ. ச. கந்தையா
A. S. Kandiah
கொம்மிஷனர்

காரைநகர்,
8-6-51.

M. 36 19-6-51.

## அகில இலங்கைச் சைவசமயபாடப் பரீக்ஷை 1951

அடுத்த பரீக்ஷை வரும் 21-10-51 அக்டோபர் 21-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமெனவும், விண்ணப்பங்கள் ஜூலை 16-ந் தேதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும் விண்ணப்பப் பத்திரங்கள், விதிகள், பாடவிதானம் முதலியன பரீக்ஷா காரியதரிசியிடம் பெறற்பாலன எனவும் மேற்படி காரியதரிசியாகிய திரு எஸ். என். சண்முகநாதன் தெரிவிக்கின்றார்.

### எல்லாஞ் சரிவந்துவிட்டன

சென்ற வெள்ளிக்கிழமை பகல் 2. மணி 45 நிமிஷத்தின்மேல், தவறி இன்று (19-6 51) மாலை $5\frac{1}{2}$ மணி வரை இவ் வண்ணார்பண்ணையிற் சில பகுதிகட்கு வாராது தடைப்பட்ட மின்சார அலையும் வெளிச்சமும் $5\frac{1}{2}$ மணிக்கு மேற் பழையபடி வரலாயின; காங்கேசன்துறைக்கும் - யாழ்ப்பாணப் பட்டினத்திற்குமிடையே தாழ்க்கப்பட்டிருந்த மின்சாரக்கம்பியிற் கோக்குவிற்பகுதியிலுள்ள ஒரு சிறு பாகம் எரிந்து உருகியமையினால் இவை தடைப்பட்டன என அறியலானோம்; எங்கள் பத்திரிகைப் பிரசுரங்கள் காலதாமசமாய் வருதற்கு இம்மின்சார அலைக் குழப்பமே காரணமென்பதையுந் தெரிவிக்கின்றோம்.

# அந்த நோக்கமல்ல

## என்கிறார் பிரதம மந்திரி

இப்போது அரசசேவையிலிருக்கும் இலங்கை வாசிகளல்லாதோரை விலக்குதற்கு இலங்கை அரசாங்கம் கருதவில்லையென பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகவர்ப்புறக்கிக் கூறுகின்றார். சென்னை "இந்து" பத்திரிகையில் இக் கருத்துப்பட வெளிவந்த சமாசாரத்தையும் பிரதமர் மறுக்கின்றார்.

இவ்வெளியீட்டின் பேருக பம்பாயிலிருந்து ஓர் அறிவித்தல் கிடைத்திருக்கிறது. அது வருமாறு:-"அரசாங்கசேவை, அல்லது அதையொத்த சேவையிலிருந்து இலங்கைக் குடிபதி உரிமை பெருத இந்தியா விலக்கப்பட வேண்டுமென்ற இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தைப் பம்பாயிலுள்ள இந்திய சாதியாரின் வெளிநாட்டுக் "காங்கிரஸ்" பலமாய் எதிர்க்கிறது. வேலையிலிருந்து நீக்கப்படுவோரின் பரிதாப நிலைமையையும் அவர்களுறும் துன்பத்தையும் தமது அரசாங்கம் பார்த்துக்கொண்டு வாளா இருந்துவிடாதென இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்குத் தெளிவாய் எடுத்துரைக்க வேண்டுமென பம்பாய்க் காங்கிரஸ் காரியதரிசி திரு. பி. டி. சக்கி என்பவர் பத்திரிகைகளுக்கு எழுதியிருக்கிறார்.

திரு. ஏ. குணசிங்கா கடைசியாய் வெளிப்படுத்திய பயங்கரமான செய்தி 1948-ம் ஆண்டு இந்திய பிரதமர் நேருவுக்கு இலங்கைப் பிரதமர் செய்த வாக்குறுதியோடு முற்றாய் மாறுபட்டதுமன்றி, சிநேகபான்மையான ஓர் தேசத்துடன் பகையை விளைவிக்கும் செயலுமாகும். வருகிற ஆகஸ்ட் முதலாந் திகதிக்குமுன், இலங்கைக் குடிபதிச் சட்டத்தின்படி இலங்கை வாசிகளெனப் பதிவுபெறத் தவறும் இலங்கை வாசிகளல்லாத அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வேலையினின்று விலக்கப்படுவார்களென புகையிரதப் பகுதியிலும் வேறைய அரசாங்கப் பகுதிகளிலும் தலைமை உத்தியோகஸ்தர்கள் அறிவித்தல் செய்திருக்கிறார்களென "இந்து" பத்திரிகை குற்றம் சுமத்தியது. அன்றியும் பொக்கிஷப் பகுதியாவது, அரசாங்க மந்திரியாவது இச்சட்டத்தால் எத்தனைபேர் பாதிக்கப்படுவார்களெனச் சொல்ல இயலவில்லையெனவும் அப்பத்திரிகை கூறிற்று.

புகையிரதப் பகுதியில் இலங்கைக் குடிபதிச் சட்ட நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற உடன்படிக்கையோடு நியமிக்கப்பட்ட ஒன்பது இலங்கை வாசிகளல்லாத கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களென அநுபவங் குறைந்த ஓர் புகையிரத உத்தியோகஸ்தர் மேலுத்தியோகஸ்தரின் அனுமதியின்றித் தப்பிதமாய் அறிவித்தல் செய்துவிட்டார். இவ் வொன்பதுபேரும் இலங்கை வாசிகளாகப் பதிவுபெற்ற பத்திரங்களைச் சமர்ப்பிக்காமையால் இவர்களை வேலையிலிருந்து நிறுத்துவது தமது கடமையெனக் குறித்த உத்தியோகஸ்தர் கருதினர்.

இலங்கை அரசாங்க சேவையிலுள்ள இலங்கை வாசிகளல்லாத உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டுமென அரசாங்கம் யாதொரு சுற்றுநிருபமும் விடுத்ததில்லையென போக்குவரவுப் பகுதி மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல கூறுகின்றார்.

## ஊர்காவற்றுறை — நயினாதீவு

### ஐக்கிய வர்த்தக முறையில் வள்ளப் போக்குவரவு

ஊர்காவற்றுறைக்கும் நயினாதீவுக்குமிடையில் யாத்திரிகர்களின் பொருட்டுக் கிரமமான மோட்டார் வள்ளப் போக்குவரவு ஐக்கிய வர்த்தக தாபன முறையில் தாபிக்கப்பட்டிருக்கிறது இப்போது ஐந்து மோட்டார் வள்ளங்கள் போக்குவரவு செய்கின்றன. இவ்விரு இடங்களுக்குமிடையேயுள்ள தூரம் 13 மைல். போய்வர வள்ளக்கூலி ரூபா. 1.

# ரேடியோ

## * இசைத்தட்டு

**திருச்சி புதன் ஜூன் 20**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 எஸ் சிதா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில செய்தி 1 50 டி ஆர் மஹாலிங்கம் புல்லாங்குழல்* 2 தமிழில் செய்தி 2 10 எஸ் சிதா பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 கும்பகோணம் சிவவடிவேலுப்பிள்ளை வயலின் 5 45 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில செய்தி 7 30 இசைச்செல்வம் 8 பஞ்சவர்ணம் III தொடர்கதை 8 15 கும்பகோணம் சிவவடிவேலுபிள்ளை வயலின் 8 30 வி பி ராதா, ஜயலக்ஷ்மி* 8 45 ஆங்கிலத்தில் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 பி மயிலப்ப சாஸ்திரி பாட்டு 10 முடிவு.

**திருச்சி வியாழன் ஜூன் 21**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 சிதம்பரம் ஜி அம்புஜக்ஷாசு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 காலை இசை* 8 30 முடிவு.

1 நாலவகை* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில செய்தி 1 50 என் வி வசந்தகோகிலம்* 2 தமிழில் செய்தி 2 10 திருகோகர்ணம் ஆர் சுப்ரமணிய ஐயர் வீணை 2 45 முடிவு.

மாலை 5 30 திருகோகர்ணம் ஆர் சுப்ரமணிய ஐயர் வீணை 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நாலவகை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 இந்தியாவை அறியுங்கள் தீவுகள் வ எஸ் குப்புசாமி ஐயங்கார் —பேச்சு 8 ராகம், தானம், பல்லவி த்வாரம் வெங்கடசாமி நாயுடு வயலின் மதராஸ் அ கண்ணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 சிதம்பரம் ஜி அம்புஜக்ஷாசு பாட்டு 10 முடிவு.

**திருச்சி வெள்ளி ஜூன் 22**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 8 ஆங்கிலத்திலசெய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்திலசெய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 சாமவல்லி, ஸ்ரீனிவாசன் வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 காரைக்குடி ஆர் பாலசந்திரன் பாட்டு 2 45 முடிவு.

மாலை 5 30 என் எம் வல்லவராஜன் பிள்ளை நாதஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 அழிக்க அன்பு நாடகம் 7 45 இலக்கிய வாசகம் எ எஸ் கோவிந்தசாமி தேவர் 8 ஜானகி ஸ்ரீனிவாசன் பாட்டு 8 30 நாலவகை* 9 ஆங்கிலத்திலசெய்தி 9 15 என் எம் வல்லவராஜன் பிள்ளை நாதஸ்வரம் 10 முடிவு.

# தொன்னெறி

1-ம் பக்கத் தொடர்ச்சி

மடங்கட்கும் அன்பர்கள் உதவிய பொருள்களிற் கொண்ட பகுதியைப் போர்க்குப் பயன் படுத்திய தீங்கே இக்கொடிய பஞ்சத்திற்கு முதற் காரணமாகும். ஏனைய துணை நிமித்த காரணங்கள் அறிஞர்க்கு விளங்காமலிரா.

மாணிக்க வாசகசுவாமிகள் தில்லையிற் கண்டது அரியகாலில் வீழ்வோரைச் சிக்கெனத் தெளிவித்துச் சிவமாக்கி அத்தமிலா ஆனந்தத்தை. இக்காலில் அக்குச சென்று தரிசிப்பார்க்கு அந்நெறி யில்லாமையால், அவ்வானந்தம் ஒருதுளியும் புலனாகவில்லை. அவருக்கு நடராஜப்பெருமான் தித்திக்குஞ் சிவபதமாயிருந்தார். இவர்கட்குப் பஞ்சாமிர்தந் தான் தித்திக்கும். யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகிநின்ற, அவ் யான் எனது என்(னும்) உரை(யை)மாய்த்துக்கோதில் அமுதானானைப் பத்திமையும் பரிசுமில்லாப் பசுக்கள் பாசமறப் பணித்து பரமுத்தி எய்தாமல், அதிகாரஞ் செலுத்தி அருகாருக்காளாகின்றன. இப்பாவிகளுக்கும் உண்டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி யாக்கை இரண்டையும் முறையே 'யான்' என்றும் 'எனது' என்றும் செறுக்குறுதல் யாதும் இன்றி உறுதல்? மாணிக்க வாசகரைத் திருநாவுக்கரசர் 'குடமுழக்கீசனை வாசகனாக் கொண்டார்' என்றருளினர். அது வாய்மையாதலை 'தீக்கி முன்னெனைத் தன்னொடு கிளரவகை குரம்பையிற் புகப்பெய்து' என்றது வெளிப்படுத்தி அதிசயப்படுத்தும். படுப்பினும், தொன்னெறி வழுவியவர்க்கு அந்நெறியுண்மை தோன்றாது. தோன்றினும், 'மண்ணிலே பிறந்து மண்ணாவதற்கு ஒருப்படுகின்ற' பொல்லாமையைப் போக்கிக்கொள்ளப் புத்தியுண்டாகாது. உண்டானால், "முவேழ் சுற்றம் முரணுறு நரகிடை ஆழாமே" செய்யும் திருவருள் நெறியைப் போற்றும் சிவாலயங்களையும் மடாலயங்களையும் பண்டைய முறையில் பாதுகாத்துப்பயன் பெறக் கருமுயற்சி யுடையவர் மக்கள்.

மக்கள் விரும்புவது இன்பத்தை. வெறுப்பது அவ் வின்பந் தரும் நெறியை. இம்முரண்பட்ட செயல் விலங்கிற்கு மில்லையே! மக்கட்கு உண்டாகலாமோ?

மாணிக்கவாசகர்க்குச் சிவபெருமான் "மழக்கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்" என்னும் படி, "கண்ணுறக் கண்டுகொண்டு களித்த"ற்கு நேர்பட்டு நின்றனன். அதுவே இருள் கடிந்து வெளியே எழுகின்ற ஞாயிறேபோன்ற, உள்ளத்து எழுகின்ற ஞாயிறுபோன்று நின்றதிலே. இத்திரு அருள்நிலை, மலமருள்நிலையுடைய மாக்களுக்கு விளங்காது. உரையும் உணர்வும் இறந்து நின்று உணர்த்தால்தான் விளங்கும். அவ்வாறு விளக்கம் பெற, திருவருள் நெறிக்கு ஒத்து நில்லாது மாற்கின்ற மயக்கிடும் வஞ்சப் புலன் ஐந்தின் வழியை அடைத்துவிடவேண்டும். அவ்வழியை அடைக்க மறைவழியொழுக வேண்டும். மறைவழி என்பது வேதமார்க்கம். ஆகமமார்க்கமும் இதிலடங்கும். திருவருள் நிலை உயிர்க்கு வேதாகமப்பொருள் வடிவாகத்தான் எய்துகின்றது. ஆலயங்கள் அப்பொருளைப் படமாக நின்று காட்டுகின்றன. மடங்கள் அவற்றைக் கற்பித்தொழுகித் தெளிவிக்கின்றன. அப்பன் கழல்களைத்திச் சிறந்திருக்கும் அறிவினரே இதனை இசைவர். பூசித்துக் காட்டுமிடம் கோயில். பூசிக்கக் காட்டுவது மடம். பாச வேரறுக்கும் பழம் பொருட்குப் பூசனைபோல உகப்பது வேறில்லை. மொட்டறு மலர்பறித்து இறைஞ்சிப் பத்தியாய் நினைந்து பரவுவார்க்குப் பரகதி கொடுத்து அருள் செய்யும் உண்மையைக் கோயிலும் மடமும் அன்றி வேறெதுவும் காட்டாது. அவ்வுண்மைக்கென்றே தோன்றியதால்தான் கோயில்களிற் சிறப்பொடு பூசனையும் மடங்களிற் குருபூசையும் தொன்னெறியை விளக்கி வருகின்றன. அருள் நிலையை அறிந்து, அருளைப் பெற்றுப் பேரின்ப வாழ்வு நிகழ்த்த வேண்டின் - இம்மையில் சிறு துன்பமும் சேராது, முழு நலந்தோடும் வாழவிரும்பின், சிவாலயங்களும் மடங்களுமாகிய அருள் நிலைகளை மக்கள் யாவரும் காக்க முற்பட்டு வருக. வராவிடின் காப்பவரை ஊக்குக. கெடுப்பவரைத் தடுக்க. ஒன்றுஞ் செய்யாதோர்க்கு இன்பம் எய்த வழியில்லை. ஏன்? அது நெறியன்று; நெறியல்லா நெறியே; அந்நெறி சென்றோர் முத்தி நெறி அறியாத மூர்க்கரேயாவர்.

சிறு நெறிகளைத் தவிர்த்து, திருவருளை சேரும் வண்ணம் பத்தி நெறி நின்று, பழவினைகளைப் பாற்றி, சித்தமலம் அற்று, சிவமாகி, அழியா இன்பம் எய்துவதற்குத் திருவெண்ணீறணியுஞ் சைவத் தூய்நெறியே உய்யுநெறி.

"மரணம் அழித்தோம் மதிமறந்தோம்
மங்கைநல்லீர்
வானந் தொழுந் தென்னன் வார்கழலே
நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம்
அவ்வணமே
ஆனந்த மாகின் றுடாமோ
தோணோக்கம்"
திருச்சிற்றம்பலம்.

# வெங்காயம் உருளைக்கிழங்கு

## விரைவில் இறக்குமதியாகுமாம்

தேங்காய் நெய்யின்விலை ஒருவாறு குறைந்துவிட்டதெனலாம்; போத்தலொன்று 1 ரூபா 60 சதம் வரையில் விற்ற தேங்காய்நெய் இப்பொழுது 1ரூபா 20 சதம், ஒன்றே கால் ரூபாவரை விலைப்படலாயிற்று; கறிக்குரிய பொருள்களாகிய வெங்காயமும் உருளைக்கிழங்கும் மாசக் கணக்கில் இங்கு விலையேறியபடியே யிருக்கின்றன; வெங்காயம் இறாத்தல் 40 சதம்வரை விலைப்படுகிறது; உருளைக்கிழங்கு றாத்தல் 35 சதம் 38 சதம் வரையில் விலைப்படலாயிற்று; இங்கு இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலையுயர்ச்சியைப் பார்த்து, ஊர் வெங்காய வியாபாரிகளும் விலையை ஏற்றிக் கொண்டனர்; போதிய வெங்காயமும் கிழங்கும் சிலகாலமாக இலங்கையில் இறக்குமதி செய்யப்படாமைக்குக் காரணம் இவற்றை ஏற்றுமதி செய்தற்குக் கப்பல்கள் அகப்படாமையெனத் தெரிவிக்கப்படுகிறது: ஆனால் விரைவில் வெங்காயம் கிழங்கு மைசூர்ப்பருப்பு என்னுமிவைகளைத் தருவித்தற்காகிய முயற்சிகள், இஸ்லாமிய ரம்ஜான் விரதத்தை யுத்தேசித்து இங்குள்ள வியாபாரிமாரால் செய்யப்படுகின்றனவாம்.

# நமது கலைநிலையம்

**சச்சபுட வெண்பா (குறிப்புரையுடன்)**

இந்நூல் பழையதோர் தாளசாஸ்திரமாகும். இதன்கண் தாளங்களின் பேதங்கள் வரலாறுகள் நுட்பங்களெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன; தருமபுர ஆதீனத்து 25-ம் மகா சந்நிதானத்தின் விருப்பத்தின்படி, வித்துவான் ச. தண்டபாணி தேசிகரால், பெரிதும் ஆராய்ச்சி செய்து எழுதிய குறிப்புரையுடன் மேற்படி ஆதீனத்தின் 245-ம் எண் வெளியீடாகச் சிறந்த முறையில் வெளியிடப்பெற்றுள்ளது.

○

**காந்திய நோக்கு.**

இது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர், திரு. கா. சிவபாதசுந்தரனால், மகாத்மாகாந்தியினுடைய சரித்திரம் கொள்கைகளென்னுமிவற்றை வசன நடையிற் கூறுமுகத்தால் நலமாக எழுதப் பெற்றது. காந்தியக் கொள்கையுடையார்க்கு இது பெரும் பயன்படும். வெளியிட்டவர் நீர்வேலி அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத்தினராவர். விலை. சதம் 50 (8 அணா) பிரதிகள் யாழ்ப்பாணத்தும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெறற்பாலன.

○

**விசேஷ விசாரணைச் சபையின் அறிக்கை**

இந்துமத அறநிலையங்கள் ஆதீனங்கள் முதலியனபற்றிய விசேஷ விசாரணைச்சபையின் அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்புப்பிரதி இப்பொழுதுவெளிவந்துள்ளது; மொழிபெயர்ப்பு இயன்றவரை நுட்பமாகவும் இலகுவான வசனமாகவுமுள்ளது; ஆங்கிலக்கல்வி கிரம்பாதார் பலருடைய கேள்விப்படியே இம்மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடப்படலாயிற்று; எவரும் வாங்கிப் படித்தறியும்படி பிரதியொன்று (குறைந்தவிலையாகிய) 2. ரூபாவாக விதிக்கப்பட்டிருக்கிறது. பெற விரும்புவோர் கொழும்பிலுள்ள அரசாங்க பிரசுர நிலையத்தில் (The Government Publications Bureau Colombo) பெற்றுக்கொள்ளலாகும்.

○

**கொழும்பு விவேகானந்தசபை 48 - ம் ஆண்டறிக்கை**

இச்சபையின் 48-ம் ஆண்டுப் பரிபாலன அறிக்கை ஆங்கிலமொழியில வெளிவந்துள்ளது; மகாசபையின் அங்கத்தவர்கள் உபசபைகளின் அங்கத்தவர் பெயர்கள், கதிர்காம விஷயம், குருபூசைகள், உபநியாசங்கள், அகில இலங்கைச் சைவசமயப்பாட பரீட்சையின் வரலாறு பேறுகள், இலங்கைச்சர்வகலாசாலையில் இந்துக்கோயில், சமய விரோதமான படக்காட்சிகளைத் தடுத்தற்கான முயற்சி முதலாம் பலவிஷயங்கள் இவ்வெளியீட்டில் விபரமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன; சபையின் வரவுசெலவுக் கணக்கு, பிரதியின் ஈற்றில் விளக்கமான முறையிலே வெளியிடப்பட்டுள்ளன.

எமது பார்வைக்கனுப்பிய பிரதிகளின் பொருட்டு நன்றிகூறுகின்றோம்.

# சமய விரோதமான படக்காட்சி

சைவ மார்க்கத்தை அல்லது சைவர் வழிபடுந் தெய்வங்களை நிந்திக்கும் படக்காட்சிகளைப் பகிஷ்காரஞ் செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்க, கொழும்பு விவேகானந்த சபையார் உத்தேசிக்கின்றனர். கொழும்பில் நடைபெறும் படங்களுள் எவையெவை சைவத்துக்குப் பாதகமானவை யென ஆராய்ந்து அறிக்கை செய்யும்படி டாக்டர் T. கல்லோதரையும் திரு. மதி. N. சண்முகநாதனையுங் கொண்ட ஓர் உபசபை நியமிக்கப்பட்டிருக்கிறதென இச் சபையின் நாற்பத்தெட்டாம் வருடாந்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது. பேராதனையிற் சர்வகலாசாலை நிலையத்தில் ஓர் சைவ ஆலயத்தைத் தாபித்தற்குச் சபை முயற்சி செய்கிறதெனவும், கொழும்புக் கோட்டைப் பகுதியிற் சபைக்குரிய ஸ்தானமொன்றை நிறுவலாகுமாவெனச் சிந்திக்கிறதெனவும் அறிக்கை கூறுகின்றது.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

திறமான தேக்கமரங்கள்

•

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி றேட்

Std 2 யாழ்ப்பாணம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245. Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press. Vannarponnai; Jaffna, on Tueday June 19, 1951